சுருக்கம்

சென்னை மாநகராட்சி – தண்டையார்பேட்டை திருவொற்றியூர் நெடுஞ்சாலையில் அமைந்துள்ள சென்னை மாநகராட்சியின் தொற்றுநோய் மருத்துவமனையை நவீன வசதிகளுடன் மேம்படுத்தி கட்டுவதற்கான திட்ட மதிப்பீடு 1353.25 இலட்சங்களுக்கு அரசின் நிர்வாக ஒப்புதல் வழங்குதல் – ஆணை வெளியிடப்படுகிறது.

நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (மாந1) துறை

OFFICE OF THE COMMISSIONER – 6 JUL 2009

அரசாணை (நிலை) எண்.114

நாள்: 06.07.2009

ஆணி – 22,
திருவள்ளுவர் ஆண்டு – 2040,

படிக்கவும்:

சென்னை மாநகராட்சி ஆணையர் கடித க.து.ந.க.எண். பி2/3350/2007, நாள் 05.01.2009 மற்றும் 20.05.2009

* * * * *

ஆணை:–

மேலே படிக்கப்பட்ட சென்னை மாநகராட்சி ஆணையரின் கடிதங்களில் சென்னை மாநகராட்சியின் 2008–2009 ஆம் ஆண்டிற்கான நிதிநிலை அறிக்கையில் வணக்கத்திற்குரிய மேயர் அவர்களின் தொடக்க உரையில், சென்னை, தண்டையார்பேட்டை, திருவொற்றியூர் நெடுஞ்சாலையில் அமைந்துள்ள தொற்றுநோய் மருத்துவமனை 1914 ஆம் ஆண்டின் கட்டப்பட்டதாகும் என்றும், தற்போது மிகவும் பழுதடைந்துள்ளதாலும் இந்த மருத்துவமனையில் சிகிச்சை பெறும் புறநோயாளிகள் மற்றும் உள்நோயாளிகளின் எண்ணிக்கை நாளுக்கு நாள் அதிகரித்து வருகின்றது என்றும், இங்கு வழங்கப்படும் சேவையின் தரம் மற்றும் புதியதாக பரவி வரும் காய்ச்சல் போன்ற நோய்களை கருத்தில் கொண்டு நவீன வசதிகளுடன் கூடிய மருத்துவமனை கட்டப்படும் என்று அறிவிப்பு செய்யப்பட்டுள்ளது என்றும், இதன்படி, இம்மருத்துவமனை கட்டடத்தை நவீன வசதிகளுடன் கூடிய வடிவமைப்பு செய்வதற்கான பணி கட்டட எழில் கலைஞர் திருவாளர்கள். ஆஸ்கார் கன்சசாவோ இன்டர்நேஷனல் அவர்களுக்கு வழங்கப்பட்டுள்ளது என்றும் தெரிவித்துள்ளார். மேற்கண்ட நிறுவனத்திடமிருந்து பெறப்பட்ட வடிவமைப்பு தொடர்பாக பலமுறை கலந்தாலோசித்த பிறகு சில திருத்தங்களுடன் தேர்வு செய்யப்பட்டுள்ளது என்றும் தெரிவித்துள்ளார். இம்மருத்துவமனை வளாகத்தில் கீழ்கண்ட கட்டிடங்கள் நவீன வசதிகளுடன் கட்ட வடிவமைக்கப்பட்டு உத்தேச திட்ட மதிப்பீடு தயாரிக்கப்பட்டுள்ளது என்றும் தெரிவித்துள்ளார்:

| வ. எண். | விவரம் | கட்டிட பரப்பளவு | | மொத்த பரப்பளவு (சதுர மீட்டரில்) |
|---|---|---|---|---|
| | | தரை தளம் | முதல் தளம் | |
| 1 | நிர்வாக அலுவலக கட்டிடம் மற்றும் மருத்துவ இணைஇயல் பிரிவு (Administrative Block) | 2948.00 ச.மீ. | 2948.00 ச.மீ. | 5896.00 |
| 2 | வயிற்று போக்கு மற்றும் வாந்தி நோய்களுக்காக சிகிச்சை கட்டிடம் (Acute Diarrheal Diseases Block) | 627.35 ச.மீ. | 625.00 ச.மீ. | 1252.35 |
| 3 | காற்றின் மூலம் பரவும் நோய்களுக்கான சிகிச்சை கட்டிடம் (Air Borne Infection Block) | 627.35 ச.மீ. | 625.00 ச.மீ. | 1252.35 |
| 4 | காய்ச்சல் நோய்க்கான சிகிச்சை கட்டிடம் (Fever Block) | 627.35 ச.மீ. | 625.00 ச.மீ. | 1252.35 |
| 5 | சமையற்கூடம் (Kitchen Block) | 272.33 ச.மீ. | ----- | 272.33 |
| 6 | பிணவறை மற்றும் சலவைக்கூடம் (Mortuary & Laundary) | 272.33 ச.மீ. | ----- | 272.33 |

2. சென்னை மாநகராட்சி ஆணையர் மேற்கண்ட திட்டப்பணிக்கு பொதுப்பணித்துறையின் சுற்றறிக்கை எண்.HDO(A)/48518/2003, நாள் 25.04.2008 ல் தெரிவித்துள்ளவாறு 2008–2009 ஆம் ஆண்டின் கட்டட பரப்பளவின் விலைவிகித அடிப்படையில் தோராய திட்ட மதிப்பீடு ரூ.1230.00 இலட்சங்களுக்கு தயாரிக்கப்பட்டுள்ளது என்றும், மற்றும் சுகாதார அலுவலர் அவர்களின் குறிப்பின்படி மருத்துவமனைக்கு தேவையான தளவாடங்கள் கொள்முதல் செய்யவும் மற்றும் உள்கட்டமைப்பு வசதிக்காக ரூ.123.25 இலட்சங்கள் தேவைப்படுகிறது என்று தெரிவிக்கப்பட்டுள்ளது என்றும் தெரிவித்துள்ளார். மேலும் மேற்கண்ட பணிக்கு தயாரிக்கப்பட்டுள்ள தோராய திட்ட மதிப்பீடு ரூ.1230.00 + 123.25 = 1353.25 இலட்சங்களுக்கு அனுமதியும் மற்றும் திட்ட மதிப்பீடு ரூ.10.00 கோடிக்கு மேல் இருப்பதால் இத்திட்டத்திற்கு அரசின் நிர்வாக அனுமதி பெறவும் மன்றத்தின் அனுமதி தீர்மானம் எண்.693/2008, நாள் 30.12.2008 மூலம் பெறப்பட்டுள்ளது என்றும் தெரிவித்துள்ளார்.

3. எனவே, மேற்கண்ட திட்டப்பணிக்கு 2008–2009 ஆம் ஆண்டின் கட்டட பரப்பளவின் விலைவிகித அடிப்படையில் தயாரிக்கப்பட்டுள்ள தோராய திட்ட மதிப்பீடு ரூ.1230.00 இலட்சங்கள் மற்றும் மருத்துவமனைக்கு தேவையான தளவாடங்கள் கொள்முதல் செய்யவும் மற்றும் உள்கட்டமைப்பு வசதிக்காக ரூ.123.25 இலட்சங்கள் ஆக மொத்த மதிப்பீடு ரூ.1353.25 இலட்சங்களுக்கு அரசின் நிர்வாக அனுமதி வேண்டியுள்ளார்.

4. சென்னை மாநகராட்சி ஆணையரின் கருத்துருவை நன்கு பரிசீலித்தபின், அரசு இந்தப்பணிக்காக ரூபாய் 8 கோடி ஏற்கனவே அரசாணை (நிலை) எண்.262, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (ந.நி4) துறை, நாள் 24.12.2008 – ல் 2008–2009 க் குரிய கேளிக்கை வரி ஈடு செய்வதற்காக சென்னை மாநகராட்சிக்கு ஒதுக்கப்பட்டுள்ளது என்றும், இதற்காக அரசு, ரூபாய் 8 கோடியுடன் சேர்த்து மொத்தம் ரூபாய் 27 கோடி தமிழ்நாடு நகர்புற நிதி (ம) அடிப்படை வசதி மேம்பாட்டு கழகத்திற்கு ஒதுக்கீடு செய்துள்ளது என்றும், மேற்கண்ட திட்டத்திற்கு தேவையான மீதம் உள்ள தொகை சென்னை மாநகராட்சியின் சொந்த நிதியிலிருந்து ஒதுக்கப்பட வேண்டும் என்ற நிபந்தனையுடன் சென்னை தண்டையார்பேட்டை திருவொற்றியூர் நெடுஞ்சாலையில் அமைந்துள்ள சென்னை மாநகராட்சியின் தொற்றுநோய் மருத்துவமனையை நவீன வசதிகளுடன் மேம்படுத்தி கட்டுவதற்கான திட்ட மதிப்பீடு 1353.25 இலட்சங்களுக்கு (ரூபாய் ஆயிரத்து முன்னூற்று ஐம்பத்தி மூன்று இலட்சத்து இருபத்தி ஐந்து ஆயிரம் மட்டும்) அரசு நிர்வாக ஒப்புதல் வழங்கி ஆணையிடுகிறது.

5. இவ்வாணை 15.06.2009 நாளிட்ட நிதித்துறை அ.சா.எண். 1333/FS/P/2009 ன் ஒப்புதலுடன் வெளியிடப்படுகிறது.

(ஆளுநரின் ஆணைப்படி)

நிரஞ்சன் மார்டி,
அரசு செயலாளர்.

பெறுநர்:
ஆணையர், சென்னை மாநகராட்சி, சென்னை – 3.
மாநில கணக்காயர், சென்னை – 18/35
இயக்குநர் உள்ளாட்சி நிதித் தணிக்கை, சென்னை – 108.

நகல்:
மாண்புமிகு முதலமைச்சர் அலுவலகம், சென்னை – 9
நிதி அமைச்சரின் சிறப்பு நேர்முக உதவியாளர், சென்னை – 9
மாண்புமிகு துணை முதலமைச்சரின் சிறப்பு நேர்முக உதவியாளர், சென்னை – 9
தலைமைச் செயலரின் தனி செயலர், சென்னை – 9
நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை அரசு செயலாளரின் தனி செயலர், சென்னை – 9
நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (அ.ந2)துறை, சென்னை – 9
இருப்ப கோப்பு / உதிரி நகல்

//ஆணைப்படி அனுப்பப்படுகிறது //

பிரிவு அலுவலர்

சுருக்கம்

சென்னை மாநகராட்சி – தங்கசாலை சந்திப்பில் மேம்பாலம் அமைக்கும் பணி – திட்ட மதிப்பீடுத்தொகை ரூ.23.00 கோடிக்கு அரசின் நிர்வாக ஒப்புதல் வழங்குதல் – ஆணை வெளியிடப்படுகிறது.

---

நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (மாந1) துறை

அரசாணை (நிலை) எண்.117 நாள்: 06.07.2009

ஆனி – 22,
திருவள்ளுவர் ஆண்டு – 2040,

படிக்கவும்:

சென்னை மாநகராட்சி ஆணையர் கடித பா.து.ந.க. எண்.பி3/370/2008, நாள்.16.05.2008, 20.06.2008, 18.09.2008, 14.11.2008, 06.01.2009, 23.03.2009 மற்றும் 28.05.2009

* * * * *

ஆணை:–

மேலே படிக்கப்பட்ட சென்னை மாநகராட்சி ஆணையரின் கடிதங்களில் சென்னை மாநகராட்சி, பாலங்கள் துறையால் சென்னை மாநகரில் நெரிசல் மிகுந்த சாலை சந்திப்புகளில் மேம்பாலம் மற்றும் சுரங்கப்பாதை அமைக்க முடிவு செய்யப்பட்டு, போக்குவரத்து நெரிசல் மிகுந்த தங்கசாலை சந்திப்பில் மேம்பாலம் அமைக்கும் பணிக்கு ஆய்வு மற்றும் வடிவமைப்பு, வரைபடப் பணிகளை மேற்கொள்ள Tamil Nadu Urban Infrastructure Financial Services Limited மூலமாக கலந்தறிதற்குரியவர் திருவாளர்கள் முகேஷ் அசோசியேட்ஸ் அவர்கள் நியமனம் செய்யப்பட்டது என்றும், Tamil Nadu Urban Infrastructure Financial Services Limited மற்றும் ஒருங்கிணைப்புக் குழு (Co-ordination Committee) ஆகியோர் கலந்து கொண்ட கலந்தாய்வு கூட்டத்தில் தங்கசாலை சந்திப்பில் மேம்பாலம் அமைக்கும் திட்டத்திற்கு திருவாளர்கள் முகேஷ் அசோசியேட்ஸ் அவர்களால் பெறப்பட்ட கருத்துரு ஆய்வு செய்யப்பட்டு தெரிவு செய்யப்பட்டது என்றும் தெரிவித்துள்ளார்.

2. மேற்கண்ட கலந்தாய்வு கூட்டத்தில் தெரிவு செய்யப்பட்ட வரைபடத்தின்படி பணியினை மேற்கொள்ள ஏதுவாக மேற்கண்ட சாலை சந்திப்புகளில் நில ஆர்ஜிதம் செய்ய பூர்வாங்க பணிகள் மற்றும் பெறப்படும் வடிவமைப்பின்படி மதிப்பீடுகள் தயாரித்து பணிகள் மேற்கொள்வதற்கு ஏதுவாக மன்றத்தீர்மான எண்.641/2007, நாள் 29/12/2007–ன் மூலம் மன்ற ஒப்புதல் பெறப்பட்டு தொடர் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது என்றும் சென்னை மாநகராட்சி ஆணையர் தெரிவித்துள்ளார்.

3. மேலும் கலந்தறிதற்குரியரான திருவாளர்கள் முகேஷ் அசோசியேட்ஸ் அவர்கள் மேற்கண்ட பணிக்கான வடிவமைப்பு, வரைபடம் மற்றும் மதிப்பீடுகளை அளித்துள்ளார் என்றும் கலந்தறிதற்குரியவர் அளித்த வடிவமைப்பை சரிபார்க்கும் பணிக்காக ஒப்பந்தங்கள் கோரப்பட்டு, தற்போது பி.இ.எம்.எஸ். நிறுவனம் மூலமாக சரிபார்க்கும் பணி நடைபெற்று வருகிறது என்றும் சென்னை மாநகராட்சி ஆணையர் தெரிவித்துள்ளார். இதனிடையே மேற்கண்ட மேம்பாலப்பணியினை மேற்கொள்ள சென்னை குடிநீர் மற்றும் கழிவு நீர் அகற்று வாரியம் தனது நிலத்தடிக்குழாய்களை மாற்றியமைப்பதற்காக

ரூ.3,33,00,000/-- க்கு மதிப்பீடும், தமிழ்நாடு மின்சார வாரியம் தனது கம்பி வடங்களை மாற்றியமைக்க ரூ.18,73,985/-- மற்றும் ரூ.1,55,760/-- க்கு மதிப்பீடுகள் அளித்துள்ளது. மேற்கண்ட சேவைத்துறையினரின் நிலத்தடி குழாய்கள் மற்றும் கம்பி வடங்களை மாற்றுவதற்கு முன்பணம் செலுத்த வேண்டியுள்ளதால் இம்மேம்பாலம் அமைக்கும் பணிக்காக 2008-09 ம் ஆண்டு அலுவலக விலைப்பட்டியல்படி ரூ.26,00,00,000/-க்கு தோராய மதிப்பீடு தயாரிக்கப்பட்டுள்ளது என்றும் இத்தோராய மதிப்பீடு தொகைக்கு அரசின் ஆட்சி முறை ஒப்பளிப்பு பெறப்பட வேண்டும் எனவும் சென்னை மாநகராட்சி ஆணையர் தெரிவித்துள்ளார்.

4. எனவே தங்கசாலை சந்திப்பில் மேம்பாலம் அமைக்கும் திட்டத்திற்கு சேவைத் துறையினரின் நிலத்தடி குழாய்கள் மற்றும் கம்பிவடங்களை மாற்ற சேவைத்துறையினருக்கு பணியினை முடிக்கும் வகையில் உடனடியாக பணம் செலுத்த வேண்டியுள்ளதால், சென்னை தங்க சாலை சந்திப்பில் மேம்பாலம் அமைக்கும் திட்டத்திற்கு தோராய மதிப்பீட்டுத் தொகையான ரூ.26.00 கோடிக்கு நிர்வாக ஒப்புதல் அளிக்குமாறு சென்னை மாநகராட்சி ஆணையர் அரசை கோரியுள்ளார்.

5. சென்னை மாநகராட்சி ஆணையரின் கருத்துருவை அரசு ஆழ்ந்து பரிசீலித்தபின், மேற்பார்வை செய்யும் பணியாளர்களின் சம்பளம் சென்னை மாநகராட்சி நிதியிலிருந்து மேற்கொள்ளப்படுவதாலும், இத்திட்டத்திற்கான திட்ட மதிப்பீட்டிலிருந்து செய்யப்படவில்லை என்பதாலும் இதுதொடர்புடைய செலவை திட்ட மதிப்பீட்டுடன் சேர்க்க கூடாது என்றும், பொதுப்பணித்துறை எதிர்பாரா செலவினத்திற்காக 2.5 சதவீதமும் மேற்பார்வை செலவுக்காக 2.5 சதவீதமும் கோரும்போது அதிகப்படியான செலவு மேற்படி இனங்களுக்கு மேற்கொள்ள முகாந்திரம் இல்லை என்றும், இது குறைக்கப்பட வேண்டும் என்றும் மேலும் 2009-2010ஆம் ஆண்டிற்கான விலை விகிதம் குறைவாக இருப்பதாலும் மேற்படி ஆணை பெற திருத்திய மதிப்பீடு தயாரிக்கப்பட்டு அரசின் நிர்வாக அனுமதி பெற வேண்டும் என்ற நிபந்தனையுடன் சென்னை மாநகராட்சி தங்கசாலை சந்திப்பில் மேம்பாலம் அமைக்கும் பணிக்கு ரூபாய் 23 கோடிக்கு (ரூபாய் இருபத்திமூன்று கோடி மட்டும்) அரசு நிர்வாக ஒப்புதல் வழங்கி ஆணையிடுகிறது.

6. இவ்வாணை 22.06.2009 நாளிட்ட நிதித்துறை அ.சா.எண்.1627/FS/P/2009 ன் ஒப்புதலுடன் வெளியிடப்படுகிறது.

(ஆளுநரின் ஆணைப்படி)

நிரஞ்சன் மார்டி,
அரசு செயலாளர்.

பெறுநர்:
ஆணையர், சென்னை மாநகராட்சி, சென்னை - 3.
மாநில கணக்காயர், சென்னை - 18/35
இயக்குநர் உள்ளாட்சி நிதித் தணிக்கை, சென்னை - 108.

நகல்:
மாண்புமிகு முதலமைச்சர் அலுவலகம், சென்னை - 9
நிதி அமைச்சரின் சிறப்பு நேர்முக உதவியாளர், சென்னை - 9
மாண்புமிகு துணை முதலமைச்சரின் சிறப்பு நேர்முக உதவியாளர், சென்னை - 9
தலைமைச் செயலரின் தனி செயலர், சென்னை - 9
நிதித்துறை, சென்னை - 9
நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை அரசு செயலாளரின் தனி செயலர், சென்னை - 9
நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (அந2)துறை, சென்னை - 9
இருப்பு கோப்பு / உதிரி நகல்

//ஆணைப்படி அனுப்பப்படுகிறது //

பிரிவு அலுவலர்

## சுருக்கம்

சென்னை மாநகராட்சி – பெரம்பூர் கணேசபுரம் சுரங்கப்பாதையின் மேல் மேம்பாலம் அமைக்கும் பணி – திட்ட மதிப்பீடுத்தொகை ரூ.61.70 கோடிக்கு அரசின் நிர்வாக ஒப்புதல் வழங்குதல் – ஆணை வெளியிடப்படுகிறது.

---

### நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (மாந1) துறை

அரசாணை (நிலை) எண்.115 | நாள்: 06.07.2009

ஆணி – 22,
திருவள்ளுவர் ஆண்டு – 2040,

படிக்கவும்:

சென்னை மாநகராட்சி ஆணையர் கடித பா.து.ந.க. எண்.பி3/371/2008, நாள்.16.05.2008, 20.06.2008, 18.09.2008, 04.03.2009, 24.04.2009 மற்றும் 28.05.2009

* * * * *

ஆணை:–

மேலே படிக்கப்பட்ட சென்னை மாநகராட்சி ஆணையரின் கடிதங்களில் சென்னை மாநகரில் நெரிசல் மிகுந்த சாலை சந்திப்புகளில் மேம்பாலம் மற்றும் சுரங்கப்பாதை அமைக்க முடிவு செய்யப்பட்டு, போக்குவரத்து நெரிசல் மிகுந்த சாலைகளான தங்கசாலை சந்திப்பில் மேம்பாலம் மற்றும் கணேசபுரம் சுரங்கப்பாதையில் மேல் மேம்பாலம் அமைக்கும் பணிகளுக்கு போக்குவரத்து ஆய்வு மற்றும் வடிவமைப்பு, வரைபடப் பணிகளை மேற்கொள்ள Tamil Nadu Urban Infrastructure Financial Services Limited மூலமாக கலந்தறிதற்குரியவர் திருவாளர்கள் முகேஷ் அசோசியேட்ஸ் அவர்கள் நியமனம் செய்யப்பட்டனர் என்றும் Tamil Nadu Urban Infrastructure Financial Services Limited மற்றும் ஒருங்கிணைப்புக்குழு (Co-ordination committee)ஆகியோர் கலந்துக்கொண்ட கலந்தாய்வு கூட்டத்தில் கணேசபுரம் சுரங்கப்பாதையின் மேல் மேம்பாலம் அமைக்கும் திட்டத்திற்கு திருவாளர்கள் முகேஷ் அசோசியேட்ஸ் அவர்களால் பெறப்பட்ட கருத்துரு ஆய்வு செய்யப்பட்டு தெரிவு செய்யப்பட்டது என்றும், மேற்கண்ட கலந்தாய்வு கூட்டத்தில் தெரிவு செய்யப்பட்ட வரைபடத்தின்படி பணியினை மேற்கொள்ள ஏதுவாக மேற்கண்ட சாலை சந்திப்புகளில் நில ஆர்ஜிதம் செய்ய பூர்வாங்க பணிகள் மற்றும் பெறப்படும் வடிவமைப்பின்படி மதிப்பீடுகள் தயாரித்து பணிகள் மேற்கொள்வதற்கு ஏதுவாக மன்றத்தீர்மான எண்.641/2007, நாள்.29.12.2007ன் மூலம் மன்ற ஒப்புதல் பெறப்பட்டு தொடர் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது என்றும் தெரிவித்து உள்ளார். மேலும் கலந்தறிதற்குரியரான திருவாளர்கள் முகேஷ் அசோசியட்ஸ் அவர்கள் மேற்கண்ட பணிக்கான வடிவமைப்பு, வரைபடம் மற்றும் மதிப்பீடு அளித்துள்ளனர் என்றும், கலந்தறிதற்குரியவர் அளித்த வடிவமைப்பை சரிபார்க்கும் பணிக்காக ஒப்பங்கள் கோரப்பட்டு, தற்போது பி.இ.எம்.எஸ் நிறுவனம் மூலமாக சரிபார்க்கும் பணி நடைபெற்று வருகிறது என்றும் அவர் தெரிவித்து உள்ளார்.

2. மேற்கண்ட மேம்பாலப்பணியினை மேற்கொள்ள சென்னை குடிநீர் மற்றும் கழிவுநீர் அகற்று வாரியம் தனது நிலத்தடிக்குழாய்களை மாற்றியமைப்பதற்காக ரூ.8,22,23,000/–க்கு மதிப்பீடு அளித்துள்ளது. மேலும் தமிழ்நாடு மின்சாரவாரியம் தனது கம்பி வடங்களை

மாற்றியமைக்க ரூ.13,16,425/–க்கு மதிப்பீடு அளித்துள்ளது. மேற்கண்ட சேவைத்துறையினரின் நிலத்தடிக்குழாய்கள் மற்றும் கம்பி வடங்களை மாற்றுவதற்கு முன்பணம் செலுத்த வேண்டியுள்ளதால், இம்மேம்பாலம் அமைக்கும் பணிக்காக 2008–2009ம் ஆண்டு அலுவலக விலைப்பட்டியல்படி ரூ.61,70,00,000/–க்கு தோராய மதிப்பீடு தயாரிக்கப்பட்டுள்ளது என்றும், இத்தோராய மதிப்பீட்டு தொகைக்கு மன்ற ஒப்புதல் தீர்மான எண்.151/2008, நாள்.03.05.2008ன்படி பெறப்பட்டுள்ளது என்றும் ஆணையர் கூறியுள்ளார். இம்மேம்பால திட்டத்தின் மதிப்பீட்டில் Superior Supervision Charges 10%. Petty Supervision charges and contingencies 5% கணக்கீடு செய்யப்பட்டுள்ளது. இத்திட்டம் பெருந்திட்டம் என்பதால் 15 சதவீதம் மேற்பார்வை செலவினமாக அவசியமாகிறது என்றும் இத்திட்டம் TNUDF, TUFIDCO மற்றும் Transfer of Development Rights மூலமாகவும் நிதியுதவி பெற்று பணி நடைமுறைபடுத்தப்படவுள்ளது என்றும் ஆணையர் கூறியுள்ளார்.

3. மேற்குறித்த சூழ்நிலையில் பெரம்பூர் கணேசபுரம் சுரங்கப்பாதை மேல் மேம்பாலம் அமைக்கும் பணிக்கான திட்டமதிப்பீட்டுத்தொகை ரூ.61.70 கோடிக்கு ஆட்சிமுறை ஒப்பளிப்பு வழங்க சென்னை மாநகராட்சி ஆணையர் அரசை கேட்டுக் கொண்டுள்ளார்.

4. சென்னை மாநகராட்சி ஆணையரின் கருத்துருவை அரசு நன்கு ஆழ்ந்து பரிசீலித்தபின், சென்னை மாநகராட்சி ஆணையர் 2009 – 2010 ஆம் ஆண்டிற்கான விலைவிகிதப்படி திருத்திய நிர்வாக ஒப்புதல் அரசிடம் பெறவேண்டும் என்ற நிபந்தனையுடன், பெரம்பூர் கணேசபுரம் சுரங்கப்பாதையின் மேல் மேம்பாலம் அமைக்கும் பணிக்கான திட்டமதிப்பீட்டுத் தொகை ரூ.61.70 கோடிக்கு (ரூபாய் அறுபத்தியொரு கோடியே எழுபது லட்சம் மட்டும்) அரசு நிர்வாக ஒப்புதல் வழங்கி ஆணையிடுகிறது.

5. இவ்வாணை 21.06.2009 நாளிட்ட நிதித்துறை அ.சா.எண்.1614/FS/P/2009 ன் ஒப்புதலுடன் வெளியிடப்படுகிறது.

(ஆளுநரின் ஆணைப்படி)

நிரஞ்சன் மார்டி,
அரசு செயலாளர்.

பெறுநர்:
ஆணையர், சென்னை மாநகராட்சி, சென்னை – 3.
மாநில கணக்காயர், சென்னை – 18/35
இயக்குநர் உள்ளாட்சி நிதித் தணிக்கை, சென்னை – 108.

நகல்:
மாண்புமிகு முதலமைச்சர் அலுவலகம், சென்னை – 9
நிதி அமைச்சரின் சிறப்பு நேர்முக உதவியாளர், சென்னை – 9
மாண்புமிகு துணை முதலமைச்சரின் சிறப்பு நேர்முக உதவியாளர், சென்னை – 9
தலைமைச் செயலரின் தனி செயலர், சென்னை – 9
நிதித்துறை, சென்னை – 9
நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை அரசு செயலாளரின் தனி செயலர், சென்னை – 9
நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (அந2)துறை, சென்னை – 9
இருப்பு கோப்பு / உதிரி நகல்

//ஆணைப்படி அனுப்பப்படுகிறது //

06/07/09
பிரிவு அலுவலர்
6/7/09